## கழகத்தின்
# கொள்கை விளக்காக ஒளி வீசியவர்!
## கயல் தினகரன் மறைவு குறித்து - முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, பிப். 16-

“கழகத்தின் கொள்கை விளக்காக ஒளி வீசியவர் கயல் தினகரன் அவர்கள்” என்று அவரது மறைவு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:

கொள்கை விளக்காக ஒளிவீசிய கழக இலக்கிய அணியின் மாநில இணைச் செயலாளர் திரு. கயல் தினகரன் அவர்கள் மறைந்தார் என்ற துயரச் செய்தி வந்தடைந்தது என்னை வருத்தத்தில் ஆழ்த்தியது.

பகுத்தறிவுக் கொள்கைகளின்பால் ஈர்க்கப்பட்டு திராவிடக் கருத்தியலை உள்வாங்கி கழகமே தன்மூச்சென செயல்பட்ட முன்னோடிதான் நமது கயல் தினகரன் அவர்கள். இதழியல் துறையில் மின்னிய அவரது எழுத்தாற்றல் சிறுகதை மன்னன் எஸ்.எஸ்.தென்னரசு அவர்களால் பட்டை தீட்டப்பட்டது.

அவரது ‘தென்னகத் தலைவன்’ ஏட்டினை பேரறிஞர் அண்ணா அவர்கள் வெளியிட்டார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மூத்த பிள்ளையான முரசொலியில் துணை ஆசிரியராகப் பணியாற்றிய அனுபவமும் பெற்றார்.

2001ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் கலைஞர் விருதினை தலைவர் கலைஞர் அவர்களது கரங்களால் பெற்ற பெருமைக்குரியவர். எழுபது ஆண்டுகளுக்கும் மேலாகக் கருப்பு சிவப்பே தனது வாழ்வென இருந்த கயல் தினகரன் இயற்கையின் மடியில் துயில் கொள்ளச் சென்றிருப்பது கழகத்துக்குப் பேரிழப்பாகும்.

கயல் தினகரன் அவர்களது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள், கழகத் தோழர்கள் அனைவர்க்கும் ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

## போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயி உயிரிழப்பு!

புதுடெல்லி, பிப். 17–

டெல்லியை நோக்கி நடைபெற்ற விவசாயிகள் போராட்டத்தில் பங்கேற்ற கியான்சிங் காவல்துறையினர் நடத்திய கண்ணீர் புகைகுண்டு வீச்சில் மூச்சுத் திணறல் ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட விவசாயி உயிரிழந்தார்.

பஞ்சாப் மாநிலம் சூர்தாஸ்பூரைத் சேர்ந்த விவசாயி கியான்சிங் தற்போது நடைபெற்று வரும் விவசாயிகள் போராட்டத்தில் தீவிரமாக பங்கேற்று இருந்தார்.

ஷம்பு எல்லையில் நடைபெற்ற கண்ணீர் புகைகுண்டு வீச்சில் அவருக்கு மூச்சுச் திணறல் ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்தார்.

மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி விவசாயி கியான்சிங் உயிரிழந்தார்.

போலீசாரின் பிளாஸ்டிக் குண்டுகள் தாக்குதலில் 3 விவசாயிகளுக்கு கண்பார்வை பறிபோனது.



வேலூர் மாவட்டம் முன்னாள் மாவட்டக் கழக செயலாளர் அகரம்சேரி ப.சண்முகம் அவர்களின் 18ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு திருவுருவப் படத்திற்கு வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர், கழக அமைப்புச்சாரா ஓட்டுநர் அணி மாநில தலைவர் டி.எம்.கதிர் ஆனந்த் மலர் மாலை அணிவித்து மலர்த்தூவி அஞ்சலி செலுத்தினார். அருகில் மாதனூர் ஒன்றிய கழக செயலாளர் ப.ச.சுரேஷ் குமார், தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ப.ச.நித்தியானந்தம், மாவட்ட அவைத் தலைவர் ஆர்.எஸ்.ஆனந்தன் ஒன்றிய கழக செயலாளர்கள் கள்ளூர்ரவி, நத்தம்பிரதீஷ் ,ஆம்பூர் நகராட்சி தலைவர் ஏஜாஸ்அகமது, பேரூர் கழக, கிளை கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## சாலை விபத்தில் உயிரிழந்த
# போக்குவரத்து காவல் அதிகாரி குடும்பத்திற்கு ரூ.25 லட்சம் நிதியுதவி!
## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, பிப். 17 -

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் தேசிய நெடுஞ்சாலையில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்த போக்குவரத்துச் சிறப்பு உதவி ஆய்வாளரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் ரூ.25 லட்சம் நிதியுதவி அளித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை போக்குவரத்துப் பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்துவரும் ஜஸ்டின் (வயது 53) த/பெ. ஜோசப்பின் என்பவர் 15- 2-2024 அன்று பிற்பகல் பணி நிமித்தமாக இருசக்கர வாகனத்தில் நாகர்கோவில் திருவனந்தபுரம் தேசிய நெடுஞ்சாலை, இரணியல் காவல் சரகம், அக்கினியானா குளம் அருகில் சென்றுகொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக நிகழ்ந்த சாலை விபத்தில் லாரி மோதியதில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

பணியின் நிமித்தமாக சென்று கொண்டிருந்தபோது ஏற்பட்ட சாலை விபத்தில் போக்குவரத்துச் சிறப்பு உதவி ஆய்வாளர் ஜஸ்டின் அவர்கள் உயிரிழந்துள்ளது காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும்.

போக்குவரத்துச் சிறப்பு உதவி ஆய்வாளர் ஜஸ்டின் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் அவருடன் பணிபுரிபவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு அவரது குடும்பத்தினருக்கு இருபத்தைந்து இலட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை
# வேலூரில் ‘உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்’ பொதுக்கூட்டம்!
## மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிக்கை!



*வேலூர், பிப். 17-*

*மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:- 2021 சட்டபேரவை தேர்தலுக்கு முன்பாக அ.தி.மு.க. அரசின் 10 ஆண்டு கால முறையற்ற நிர்வாகம், மக்களின் குறைகள், துன்பங்களை நேரடியாக கேட்டறிந்திட கழக முன்னணியினர் விடியலை நோக்கி ஸ்டாலினின் குரல் என்ற பரப்புரையில் பங்கேற்று அ.தி.மு.க.வை மக்கள் நிராகரிப்பதற்கான அடித்தளமிட்டனர்.*

*வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தல் 2024ல் கடந்த 10 ஆண்டு காலத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டிற்கு இழைத்த அநீதிகளையும், ஒன்றிய அரசிடம் மாநிலத்தின் உரிமைகளை அடகு வைத்து தற்பொழுது நாடகமாடும் அடிமை அ.தி.மு.க.வின் துரோகத்தையும் மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில், கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களின் அறிவிப்புபடியும், கழக பொதுச்செயலாளர், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களின் அறிவுறுத்தல்படியும், கழக இளைஞர்அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும் நாடாளுமன்றத் தேர்தல் 2024, நமது உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல் எனும் வெற்றி முழக்கத்தின் படி வேலூர் நாடாளுமன்ற தொகுதி தி.மு.க. சார்பில் 17.02.2024 சனிக்கிழமை அன்று மாலை 05.00 மணிக்கு வேலூர் அண்ணா கலையரங்கம் அருகில், எனது தலைமையில் (ஏ.பி. நந்தகுமார் எம்.எல்.ஏ.) நடைபெறுகிறது.*

*திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. செயலாளரும், சோலையார்பேட்டை சட்டபேரவை தொகுதி உறுப்பினருமான க.தேவராஜ் வரவேற்புரையில், வேலூர் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, வேலூர் மாநகர செயலாளர், சட்டபேரவை உறுப்பினர் ப. கார்த்திகேயன், வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த், திருப்பத்தூர் மாவட்ட அவைத்தலைவர் ஆர்.எஸ்.ஆனந்தன், வேலூர் மாவட்ட பொருளாளர் சி.நரசிம்மன், மாவட்ட துணைச் செயலாளர்கள் ஜி.எஸ்.அரசு, எஸ். பாண்டியன், மலர்விழிலோகநாதன், திருப்பத்தூர் மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.கே.மோகன், ஆ.சம்பத்குமார், சாந்திசீனிவாசன், மாவட்ட பொருளாளர் கே.பி.ஆர்.ஜோதிராமன் ஆகியோர்கள் முன்னிலையில் கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு விழா சிறப்புரையில் மாபெரும் பரப்புரை பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.*

*இப்பொதுக்கூட்டத்தில் ஆம்பூர் சட்டப்பேரவை உறுப்பினர் அ.செ.வில்வநாதன், குடியாத்தம் சட்டபேரவை உறுப்பினர், அமலு விஜயன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் மு.பாபு, வேலூர் மாநகர மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம்.சுனில் குமார் மற்றும் வேலூர், திருப்பத்தூர் மாவட்ட தலைமைக்கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில அணிகளின் துணைச் செயலாளர்கள், தலைமைக்கழக தொகுதி பார்வையாளர்கள், மாநகர கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றியகுழு, நகரமன்ற, பேரூர்மன்ற தலைவர்கள், மண்டலக்குழு தலைவர்கள், உள்ளாட்சிமன்ற நிர்வாகிகள், BLA2, BLC, BLC பொறுப்பாளர்கள், வட்ட, வார்டு, ஊர்கிளை நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், இந்நாள், முன்னாள் கழக முன்னோடிகள் கலந்து கொள்கிறார்கள். முடிவில் சேண்பாக்கம் பகுதி கழக செயலாளர் பி.முருகப் பெருமாள் நன்றியுரை ஆற்ற உள்ளார்கள்.*

*எனவே வேலூர் நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட வேலூர், அணைக்கட்டு, கீ.வ.குப்பம், குடியாத்தம், ஆம்பூர் மற்றும் வாணியம்பாடி ஆகிய ஆறு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஒட்டுமொத்த கழக நிர்வாகிகள் நமது உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல் எனும் மாபெரும் தேர்தல் முழக்க பொதுக்கூட்டத்தின் வாயிலாக பாசிசம் வீழ்ந்து, இந்தியா வெற்றிபெற அலைகடலென ஆர்ப்பரித்து கூடிடுவோம், வெற்றிக் கனியை பறித்திடுவோம் என்று சபதமேற்று நிர்வாகிகள் அனைவரும் வருக வருக என வேலூர் நாடாளுமன்ற தொகுதி தி.மு.க. சார்பில் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.*

*இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*



வேலூர் நாடாளுமன்றத் தொகுதி சார்பில், அண்ணா கலையரங்கம் அருகில் ‘உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்’ எனும் தலைப்பில் நடக்கும் பொதுக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக பொது பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகிறார். இதற்கான ஏற்பாடுகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் வேலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடந்தது. மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமது சகி தலைமை தாங்கினார். இதில் மாவட்ட தி.மு.க. செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். மாவட்ட பொருளாளர் சி.நரசிம்மன், மாவட்ட துணைச் செயலாளர்கள் ஜி.எஸ்.அரசு, எஸ்.பாண்டியன், வேலூர் நாடாளுமன்ற தொகுதி பொறுப்பாளர் குறிஞ்சி சிவா,வி.பி.பொன் அரசு, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் மு.பாபு, ஒன்றிய, நகர பகுதி பேரூராட்சி செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## தேர்தல் பத்திரங்கள் தொடர்பான தீர்ப்பு:
# சாமானிய மனிதரின் நம்பிக்கையையும் காப்பாற்றியுள்ளது!
## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, பிப்.17-

தேர்தல் பத்திரங்கள் தொடர்பான உச்சநீதிமன்றத் தீர்ப்பு, சாமானிய மனிதரின் நம்பிக்கையையும் காப்பாற்றியுள்ளது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இது குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:-

“தேர்தல் பத்திரங்கள் அரசியலமைப்புச் சட்டத்துக்குப் புறம்பானவை என மாண்பமை உச்சநீதிமன்றம் மிகச் சரியான தீர்ப்பை வழங்கியிருக்கிறது. இது வெளிப்படையான தேர்தல் நடைமுறையையும், அமைப்பின் ஒழுங்கையும் உறுதிசெய்திடும். இந்தத் தீர்ப்பு மக்களாட்சியை மீட்டிருப்பதோடு அனைத்து அரசியல் கட்சிகளும் சமதளத்தில் போட்டியிடும் வாய்ப்பையும் வழங்கியிருக்கிறது. மேலும் இது அமைப்பின் மீதான சாமானிய மனிதரின் நம்பிக்கையையும் காப்பாற்றியுள்ளது”.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## விவசாய சங்கங்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து
# அனைத்து தொழிற் சங்கங்களின் சார்பில் சென்னையில் கண்டன ஆர்ப்பாட்டம்!

சென்னை, பிப். 17–

விளை பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட 7 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி, டெல்லியை முற்றுகையிடும் போராட்டத்தில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். போராட்டத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுடன் ஒன்றிய அரசு நடத்திய பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்தது. இந்நிலையில் விவசாய சங்கங்களின் சார்பில் நாடு தழுவிய போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இந்த போராட்டத்திற்கு தொ.மு.ச, சி.ஐ.டி.யு உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் ஆதரவு தெரிவித்து இருந்தன.

சென்னை அண்ணாசாலையில் உள்ள தபால் நிலையம் முன்பு அனைத்து தொழிற் சங்கங்களின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தொ.மு.ச. பொதுச்செயலாளர் சண்முகம், பொருளாளர் நடராசன், சி.ஐ.டி.யு. பொதுச்செயலாளர் சுகுமாறன், ஏ.ஐ.டி.யூ.சி பொதுச்செயலாளர் இராதாகிருஷ்ணன் மற்றும் பல்வேறு தொழிற்சங்கங்களின் நிர்வாகிகள் போராட்டத்தில் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தின் போது டெல்லியில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் கோரிக்கையை ஒன்றிய அரசு நிறைவேற்ற வேண்டும் என்பதை வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

மக்கள் விரோத, தொழிலாளர் விரோத, விவசாயிகள் விரோத ஒன்றிய மோடி அரசைக் கண்டித்து மத்திய தொழிற்சங்கங்கள், ஐக்கிய விவசாயி கள் முன்னணி சார்பில் தஞ்சாவூரில் மறியல் போராட்டம் நடைபெற்றது. தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள அஞ்சல் அலுவலகம் முன்பு தொழிற்சங்கத்தினர் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த போராட்டத்தில் தொ.மு.ச. மாவட்ட செயலாளர் சேவியர், ஏ.ஐ.டி.யூ.சி. மாநில செயலாளர் சந்திரகுமார், சி.ஐ.டி.யூ. மாநில செயலாளர் ஜெயபால், ஐ.என்.டி.யூ.சி. மாவட்ட செயலாளர் மோகன்ராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். எந்த ஒரு வாக்குறுதியையும் நிறைவேற்றாமல் ராமன் பெயரை சொல்லி ஏமாற்ற நினைக்கும் பிரதமர் மோடி தலைமையிலான அரசு விரைவில் வெளியேற்றப்படும் என்று தொழிற்சங்கத்தினர் தெரிவித்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா பிகே. ராஜகோபால்
### பிப்ரவரி 17 (2002)



திருவள்ளூர் மாவட்டம், போரூர் நகரச் செயலாளராக தொடர்ந்து முப்பது வருடங்களாக பணியாற்றியவர்.

சைதாப்பேட்டை கூட்டுறவு நிலவள வங்கியின் இயக்குனராகவும் பணியாற்றியவர்.

மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஒரு வருடம் சிறையில் இருந்துள்ளார்.

மேலும், கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோவை கா.ரா. சுப்பையன்
### பிப்ரவரி 17 (2019)



தனது கல்லூரி காலங்களிலேயே கழகக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

கோவை மாவட்டக் கழகச் செயலாளராகவும் – கழக தீர்மானக்குழுச் செயலாளராகவும், உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

கோவை நாடாளுமன்ற உறுப்பினராக பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**